முருகப்பெருமான் துணை

# மகான் பேயாழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.11.2023**, செவ்வாய்கிழமை

1. ஞானபண்டிதனார் அவதாரமே
ஞானலோகம் படைக்க வந்த
ஞானதேசிகனே ஆறுமுக அரங்கா
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது தேள் திங்கள்
குறைவிலா பஞ்ச திகதி குசன்வாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 05 ம் நாள், 21.11.2023, செவ்வாய்கிழமை)
அறிவுரை ஆசிதனை பேயாழ்வாரும்
அருளுவேன் அகிலம் நலம்பெற
3. நலம்தரும் ஞான குருவரங்கன்
நம்பிக்கை தரும் சக்தியாக
உலகமெங்கும் சன்மார்க்க நெறி
உயிர்கொலை நீக்கி வாயென
4. வாயென உபதேசம் அருளி
வாழ்வினில் தயவுடன் ஆன
தாயினை போல கருணைபெருக
தருமவழியும் காட்டும் அரங்கன்
5. அரங்கன் மார்க்கமே உலகினில்
ஆற்றல்மிக்க உயர்மார்க்கம்
வரங்களென வணங்கி ஏற்று
வையகத்தார் அரங்கனிடம் சரணாகதி
6. சரணாகதி கொண்டு செயல்பட
சகலதும் வசமாகும் எளிதாய்
சரணாகதி வழி இடரெலாம் விலகி
சாமானியரும் ஞானவான் எனும்

7. ஞானவான் எனும் பேராற்றல்
ஞானபலம் அடைவரப்பா
ஞானவான்கள் கூட்டமாகி
ஞானதேசிகன் வழிகாட்டலில்

8. வழிகாட்டலில் இந்தப் பேருலகம்
வள்ளல் தன்மை நிறைந்த
அழியாமை கொண்ட மக்களின்
ஆளுமைதனக்கு தகுதி ஆகும்

9. ஆகவே அரங்கன் தேர்வுசெய்யும்
அன்பர்கட்கே வாய்ப்புமாகி
செகத்தில் ஞான ஆட்சி
சித்தர்கள் காலமாக மாறி

10. மாறியே அற்புதம் நடக்கும்
மாண்புள மக்கள் படைகளாக
மாறியே மனுகுலம் தானும்
மாற்றம் தேவகுலம் போல

11. போலவே தரும தயவுமிக்க
புண்ணிய குணத்தால் தேறி
கோலமதாய் ஞான உலகமாகும்
கூறிவந்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—